# “Who is my Neighbour?”

## R5699

## “எனக்கு பிறன் யார்?”

“உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக.” மத்.22:39

பத்து கட்டளைகளை சுருக்கி நமது கர்த்தரால் இந்த வார்த்தைகள் குறிப்பிட்டிருந்தன. அவர் பத்து கட்டளைகளை இரண்டாகப் பிரித்து, அதில் ஒரு பகுதி தேவனிடத்தில் மனிதனுடைய கடமையாகவும், மற்றொன்று சக மனிதனிடத்தில், பிறனிடத்தில் காண்பிக்கும் கடமையாகவும் இருக்கிறது என்று காண்பித்தார். முதல் பகுதி கர்த்தரிடத்திலும் அவரது ஊழியத்திலும் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் அன்பு செலுத்த வேண்டும் என்று கூறுகிறது. மனிதனைப் பற்றிய இரண்டாவது பகுதி, நாம் நம்மிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூற வேண்டும் என்று கூறுகிறது.

யூதர் விசேஷித்த வகையில் தங்களை தேவனுடைய ஜனங்களாக கண்டுணர்ந்தனர். ஆகையால் பிரமாணத்தின் கீழ் தாங்கள் ஒவ்வொருவரும் பிறன் என்று உணர்ந்தனர். ஏனெனில் அவர்கள் அனைவரும் தேவனுடைய பிள்ளைகள், ஆனால் அவர்கள் பிறனிடத்தில் உள்ளன்போடு அன்பு செலுத்த வேண்டும் என்றும் சத்துருவை பகைக்க வேண்டும் என்றும் நினைத்தனர். வெளியிலுள்ள அனைத்து ஜாதிகளையும் தேவன் அங்கீகரிக்கவில்லை. எனினும் சுற்றிலுமுள்ள ஜாதிகளை அடிமைப்படுத்த வேண்டும் அல்லது வெளியேற்ற வேண்டும் என்று தேவன் அவர்களுக்கு கட்டளையிட்டிருந்ததற்கான காரணம் யூதர்கள் அவர்களை வெறுக்க வேண்டும் என்பதோ அல்லது தீங்கிழைக்க வேண்டும் என்பதோ தேவனுடைய விருப்பமல்ல. யூதர்கள் காரியங்களை தவறான கருத்தில் எடுத்துக் கொண்டதாக நமது கர்த்தர் காண்கிறார். சத்துருக்களை சிநேகிக்க வேண்டும் என்றும் அவர்களை துன்பப்படுத்தினவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றும், இதுவே நல்ல வழி என்பதையும் அவர் அவர்களுக்குப் போதித்தார். பரந்த எண்ணம் வேண்டும் என்பதையும் உலகம் அனைத்திலும் தரும சிந்தை காண்பிக்கப்படும் என்பதையும் காண்பித்தார்.

இதற்காக ஒரு சமயத்தில் அவர் அவர்களுக்கு நல்ல

சமாரியன் என்கிற உவமையை கூறினார். அந்த உவமையில் காயப்பட்டிருந்த ஒரு யூதனுக்கு யூதனல்லாத ஒரு மனிதன் ஊழியம் செய்தான் என்று அவர் சித்தரித்திருந்தார். ஒரு யூத ஆசாரியன் காயப்பட்டிருந்த அந்த மனிதனைப் பார்த்து பக்கமாக விலகிப்போனான். அதேபோல, ஆசாரியனைப் போல இல்லாமல் தேவனுடன் குறைவான உறவுடன் இருக்கும் லேவியனும் காயப்பட்டிருந்த அந்த மனிதனைக் கண்டு பக்கமாக விலகிப்போனான். பிறகு அந்நியனாகிய ஒரு சமாரியன், தேவனோடு உறவே இல்லாதவன் வந்தான். அவன் உடனே காயப்பட்டிருந்த மனிதனைக் கண்டு எண்ணை வார்த்து காயங்கட்டினான். அந்த மனிதன் கள்வர்களால் கொடுமைப்படுத்தப்பட்டு, காயப்படுத்தப்பட்டு, திருடப்பட்டிருந்தான். சமாரியன், "அவனை தன் சுய வாகனத்தின் மேல் ஏற்றி, சத்திரத்திற்கு கொண்டு போய் அவனைப் பராமரித்தான்;"இரவிலே அவனோடு தங்கியிருந்துவிட்டு, காலையில் புறப்படும்போது, கொஞ்சம் பணத்தை சத்திரத்தான் கையில் கொடுத்து, "இவனை நீ விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன்" என்றான். (லூக்கா 10:29-35) இந்த உவமையில் இந்த சமாரியன்தான், ஒரு நல்ல பிறனுக்கு, உதாரணம் என்று இயேசு அறிவித்தார்.

இந்த உவமை இன்றைக்கு நமக்கு ஒரு நல்ல போதனையாக இருக்கிறது. நமது கர்த்தர் கொடுத்த ஒரு நல்ல பிறன் என்கிற கருத்தை நாம் உணர்ந்து கொண்டால், நமக்கும் இதே கருத்துதான் என்று கூறி இந்த "**பொன்னான கற்பனையை**"பின் பற்றுவோமாக: நீ எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேனோ அதையே நான் உனக்கு செய்வேனாக. நீ வழியிலே சென்று கொண்டிருக்கும்போது வழிப்பறி கொள்ளையர்கள் உன்னை கொள்ளையிட்டு, உன்னை காயப்படுத்தினால், அப்பொழுது மற்றவர்கள் உனக்கு உதவ வேண்டும் என்று நீ விரும்பினால், சந்தர்ப்பம் கிடைக்கும்போது இதையே மற்றவர்களுக்கு செய்வாயாக. இந்த கருத்தில் அகில உலகமும் பிறன்தான். அவர்கள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறார்கள் என்பது முக்கியமல்ல. பூமியின் நமது பக்கம் அவர்கள் வாழ்ந்தாலும் சரி, எதிர்பக்கம் வாழ்ந்தாலும் சரி. இந்த பரந்த பொதுவான கருத்து அனைத்து உலகத்திற்கான நமது உறவையும் கடமையையும் ஒருவரைப்போல மற்றவர்களுக்கு காண்பிக்கிறது. எல்லாரும் நமக்கு பிறர்தான். சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் பிறன் என்ற முறையில் எல்லாரும் நடத்தப்படவேண்டும். இதில் விதிவிலக்கு இல்லை. ஒருவன் தன்னிடத்தில் அன்பு கூறுகிறவர்களிடம் மட்டும் அன்பு கூருவானானால், அந்த செயல் பிறனுக்குரிய ஒரு பகுதியை மட்டுமே செய்கிறவர்களாயிருப்போம். அந்த நிகழ்ச்சியில் சமாரியன் பிறனாக இருந்திருக்கமாட்டான். வழியில் கிடந்த அவனை யாரும் கண்டு, எதுவும் செய்யவில்லை என்று அவன் நினைத்திருந்தால் இவன் கூட எதுவும் செய்திருக்கமாட்டான். நமது கர்த்தர் இந்த உவமையிலும் சக மனிதர்கள் தொடர்பான ஆவியின் பிரமாணத்தில் ஒரு அடிப்படை கொள்கையை கொடுக்கிறார். அதாவது எல்லாருமே பிறர்தான் என்றும் ஒருவரையொருவர் அன்பாக பிறனுக்குரிய விதத்தில் நடத்த வேண்டும் என்றும் இது மட்டுமே மனுக்குலத்திற்கிடையே சரியான கட்டளை என்றும் கூறுகிறார். பிறரது நன்மையிலும் நலத்திலும் அக்கரையும் சிந்தையும் உடையவர்களாயிருந்து நமது அன்பை நமது பிறனிடம் வெளிப்படுத்த வேண்டும். மேலும் நமது சக்திக்கு ஏற்றாற்போல் உதவுபவர்களாக இருக்க வேண்டும். மற்ற கடமைகளும் கவனிக்கப்படவேண்டும்.

நாம் சபைக்கு வரும்போது, அதன் அங்கங்களுக்கிடையே ஒரு விசேஷித்த உறவும் பந்தமும் இருக்கிறது. இயேசு நம்மை நேசித்தது போல நாம் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இது ஒரு புதுகட்டளை. பொன்னான கற்பனை ஒரு புது கட்டளையல்ல. ஏனெனில் தேவன் மனிதனை சிருஷ்டிக்கும் போதே இது மனிதனுக்குரியதாக இருந்தது. மேலும் அது வாழ்க்கையின் சட்டமாயிருக்கும்படி திட்டமிடப்பட்டிருக்கிறது. இஸ்ரயேல் ஜனங்களின் ஒருவருக்கொருவரைப் பற்றிய மனோபாவத்தை சம்பந்தப்படுத்திய யூத பிரமாணம் பொன்னான கற்பனையின் சாராம்சத்தை உடையதாக இருந்தது. ஆனால் இயேசு தமது சீஷர்களிடம்,"புதிதான கட்டளையைக் கொடுக்கிறேன்" என்றார். அவர் சொன்னதின் பொருள்: புது சிருஷ்டியானவர்கள் ஒரு புதிய உறவைப் பெற்றிருக்கிறார்கள்; அவர்கள் ஒரு புது குடும்பத்தை, தேவனுடைய குடும்பத்தை உடையவர் களாயிருக்கிறார்கள்.

நமது சகோதரர்கள் ஆவியின் நிலையில் யாரையும்விட நமக்கு மிகவும் நெருங்கியிருக்கிறார்கள். அனைத்து புது சிருஷ்டிகளுக்கும் ஒரு சகோதரராயிருக்கக்கூடிய ஒரு புது சிருஷ்டி பொன்னான கற்பனையை கைக்கொண்டால் மட்டும் போதாது; ஆனால் இயேசு செய்தது போல எந்த ஒரு அல்லது அனைத்து சகோதரர்களுக்கும் செய்ய தயாராயிருக்க வேண்டும். அதாவது அவர்களுக்கு தனது ஜீவனையும் கொடுக்க தயாராயிருக்க வேண்டும். "நான் அவனுக்காக என் ஜீவனை கொடுக்கிறேன், ஆகையால் எனக்காக அவன் தன் ஜீவனைக் கொடுக்க விருப்பம் உள்ளவனாயிருக்க வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்" என்று அவர் கூறக் கூடியவர் அல்ல. அவர் தமது நன்மை மற்றும் ஜீவனைப் பற்றியோ மற்றவர்கள் தமக்கு என்ன செய்ய வேண்டும் அல்லது என்ன செய்யக்கூடாது என்பது பற்றியோ கவலைப்படாமல், சகோதரர்களின் ஆசீர்வாதத்திற்காக தான் என்ன செய்யலாம் என்ன செய்யப்படலாம் என்பதில் விருப்பம் உள்ளவர்களாயிருக்க வேண்டும். அவன் பொன்னான கற்பனைக்கு மேலாக ப-யின் அன்பு உடையவனாயிருக்க வேண்டும். இப்படியாக நாம் உண்மையான சீஷர்களாய் இருக்க வேண்டும்.